# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 07.11.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் இப்ராஹீமின் 32 வது வசனத்தை ஓதினார்கள்:**

பொருள் : (தூதரே!) நீர் நம்பிக்கை கொண்டுள்ள என் அடியார்களிடம் எவ்விதமான கொடுக்கல், வாங்கலும் இல்லாத, மேலும் எத்தகு நெருங்கிய நட்பும் இல்லாத நாள் வருவதற்கு முன்னர், அவர்கள் தொழுகையினைச் சிறந்த முறையினில் நிறைவேற்றி வருமாறும் நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் (நம்முடைய வழியில்) செலவு செய்து வருமாறும் கூறுவீராக. (14:32)

அல்ஹம்துலில்லாஹ். பிராட்போர்ட் ஜமாஅத்திற்கு ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. பள்ளிவாசலாக பயன்படுத்தி வந்த ஒரு Centre ஏற்கனவே இங்கு இருந்தது. அது ஒரு ஹால் ஆகும். கணிசமான மக்கள் தொழக்கூடிய ஒரு இடம் அதில் இருந்தது. நீண்ட காலம் அவ்விடம்தான் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து வந்தது என்று நினைக்கிறேன். ஆனால் அதனை பள்ளிவாசல் என்று கூறத்தக்கதாக இருக்கவில்லை. பள்ளிவாசலுக்குரிய தோற்றத்துடன் கூடிய ஒரு பள்ளிவாசலாக இந்தப் பகுதியில் இப்போதுதான் முதன்முறையாக கட்டப்பட்டுள்ளது. நான் நேரடியாக பார்த்ததில்லை என்றாலும் போட்டோவில் பார்த்திருக்கிறேன். மெயின் ரோட்டிலிருந்து பார்க்கும்போது மிக அழகிய தோற்றம் தருவதாக கூறப்படுகிறது. அதன் மேற்பகுதியில் இருந்து முழு நகரையும் பார்க்க முடிகிறது. அப்பள்ளிவாசல் முழு நகரும் காணத்தக்க விதத்தில் அமைந்துள்ளது என்று கூறலாம். மற்ற பள்ளிவாசல்கள் – ஜமாஅத் அல்லாத மற்றவர்களின் பள்ளிவாசல் – பல்வேறு இஸ்லாமிய பிரிவுகளின் பள்ளிவாசல்கள் இங்கு உள்ளன. எனினும் இந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டும் வாய்ப்பை இறைவன் நமக்கு வழங்கியுள்ளான். இந்த இடம் முழு நகரையும் பார்க்கக்கூடிய இடமாகவும், முழு நகரும் இந்த இடத்தை பார்க்கக் கூடிய விதத்திலும் அமைந்து விட்டன. இது இப்பள்ளிவாசலின் ஒரு சிறப்பம்சமாகும். இவையனைத்தும் அல்லாஹ்வின் அருளாகும். பிராட்போர்ட்டில் உள்ள உங்களுக்கும் இதுபோன்று அமைய வேண்டும் என்ற விருப்பம் இருந்திருக்கும். அல்லாஹ் அதனை நிறைவு செய்து வைத்து விட்டான். நீங்கள் பள்ளிவாசல் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தீர்கள். இறைவனும் உதவி செய்தான். பிறகு இந்த பகுதியில் இன்னும் பல பள்ளிவாசல்கள் உருவாகியுள்ளன; உருவாகிக் கொண்டிருக்கின்றன. சுருக்கமாக அதுபற்றி கூறுகிறேன். இந்த ஜுமுஆவில் அவற்றைக் குறித்தும் சிறிது கூறுவேன். அருகில் உள்ள இன்னோர் இடத்திலும் ஒரு பள்ளிவாசல் நாளை திறக்கப்பட உள்ளது. அங்கு ஜுமுஆ அன்று திறப்பு விழா நடத்தும் வாய்ப்பு இல்லாததால் இன்று அதைப் பற்றியும் கூறுகிறேன். இதேபோன்று இரண்டு Centre –கள் வாங்கும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைத்துள்ளது. இந்தப் பள்ளியின் சுருக்கமான விபரங்களைப் பற்றி தெரிந்து கொள்ள உலகில் மற்ற பகுதியில் உள்ள அஹ்மதிகளுக்கு ஆர்வம் இருக்கும். இங்குள்ள அதிகமான இந்தியர்களுக்கு இந்த இடம் பற்றி தெரிந்திருக்கும். எனவே இப்பள்ளிவாசல் பற்றி சிறிது கூறுகிறேன்.

ஜமாஅத் பற்றிய அறிமுகம் இங்கு நீண்ட நாட்களுக்கு முன்பே ஏற்பட்டு விட்டது. 1962 –ல் இங்கு ஜமாஅத் உருவாகி விட்டது. 1967 –ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இங்கு வந்திருந்தார்கள். 1973 –லும் வந்திருந்தார்கள். 1989 –ல் இப்போதுள்ள இந்த Centre வாங்கப்பட்டது. பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1982 –ல் இங்கு வந்திருந்தார்கள். 1999 –லும் வந்திருந்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கூறியதற்கிணங்க இங்கு பள்ளிவாசலுக்கான இடம் தேடப்பட்டது. 2001 –ல் ஓர் இடம் கிடைத்தது. 2004 –ல் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது உங்களுக்கு தெரியும். இந்தப் பள்ளிவாசல் கட்டுவதற்காக 23 இலட்சம் பவுண்டுகள்

செலவாகியுள்ளது. 600 பேர் தொழக்கூடிய அளவுக்கு போதுமான ஒரு ஹாலும், அதேபோன்று பெண்களுக்கென்று ஒரு ஹாலும் உள்ளது. பிறகு இன்னொரு ஹாலும் உள்ளது. தன்னார்வத் தொண்டர்கள் கணிசமான வேலை செய்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. இந்த மஸ்ஜித்திற்கான நிதியை பிராட்போர்ட் ஜமாஅத் மட்டும் திரட்டவில்லை. மாறாக, U.K. லஜ்னா இமாயில்லாஹ்விடம் பெரும்பகுதியை ஏற்றுக் கொள்ளுமாறு நான் கூறியிருந்தேன். ஏனெனில் ஹாட்லிபூரிலுள்ள மஸ்ஜித், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் பெரும்பகுதி நிதியால் கட்டப்பட்டது. எவ்வாறிருப்பினும் லஜ்னா இமாயில்லாஹ் மிக விரைந்து தமது நிதியை அளித்தது. அதேபோன்று குத்தாமுல் அஹ்மதிய்யாவும் செய்தது. பிறகு உள்ளூர் (பிராட்போர்ட்) ஜமாஅத் கணிசமான தியாகம் செய்துள்ளது. அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் நற்கூலியை வழங்குவானாக.

U.K. ஜமாஅத்துகளில் அல்லாஹ்வின் அருளால் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. முதலில் பல வருடங்களுக்குப் பிறகு ஒரு பள்ளிவாசல் அல்லது Centre உருவானது. இப்போது குறிப்பாக ஒரு பள்ளிவாசலை உருவாக்கும் எண்ணம் வந்துள்ளது. அல்லாஹ் இந்த எண்ணத்தை தொடரச் செய்வானாக. 25 பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான இலக்கு இப்போதைக்கு இவர்களுக்கு தரப்பட்டுள்ளது. விரைவில் இந்த இலக்கினை நிறைவேற்ற இருக்கிறார்கள். ஐரோப்பிய மக்கள் ஒரு பிரிவினர் எதிர்ப்பதில் முன்னேறிக்கொண்டே இருந்தாலும் அல்லாஹ்வின் அருளால் ஒரு பிரிவினர் அதுவும் இளைஞர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் ஈர்ப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் போதனைகளை குர்ஆனிலிருந்து பார்க்கின்றனர். வரலாற்றைப் படிக்கின்றனர். நடக்கின்ற சம்பவங்களை கவனிக்கின்றனர். ஐரோப்பாவில் இருக்கிற இஸ்லாத்தின் தோற்றத்தையும் பார்க்கின்றனர். இஸ்லாம் மூலம் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் பார்க்கின்றனர். அதனால் கவரப்படுகின்றனர். சில இடங்களில் ஜமாஅத் பற்றி மக்களுக்கு அவ்வளவாக அறிமுகம் இல்லை. தெரியவே தெரியாது. அம்மக்கள் முஸ்லிம் கூட்டங்களிடம் செல்கின்றனர். அவர்கள் மூலம் முஸ்லிம்களாகி சில வேளை தவறான வழியில் சென்றும் விடுகின்றனர். எனவே நான் முதலில் பிரான்ஸ் பள்ளிவாசலின் திறப்பு விழாவில் கூறினேன். ஒரு ஜெர்மனியர் வந்திருந்தார். அவர் கூறுகிறார். ஜெர்மனியில் மக்களிடம் இஸ்லாத்தின் மீது ஓர் ஈர்ப்பு உள்ளது. ஆனால் எனது விருப்பம் முஸ்லிம் ஆவதாக இருந்தால் நாம் ஒரு அஹ்மதி முஸ்லிமாகத்தான் ஆக வேண்டும். அதன் மூலமே சரியான வழியில் செல்ல முடியும். இந்த ஈர்ப்பு இம்மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இதனை நாம் பராமரித்து பாதுகாக்க வேண்டும். பள்ளிவாசல் கட்டும்போது ஒரு புதிய அறிமுகம் ஏற்படுகிறது. ஜமாஅத் பற்றி ஒரு புதிய அறிமுக வழிகள் திறக்கின்றன. அமீர் சாஹிப் ரிப்போர்ட் தந்திருந்தார். அந்த ரிப்போர்ட்டில் தமது லஜ்னாக்களின் பணியைப் பாராட்டி அவர் குறிப்பிட்டிருந்தார். U.K. லஜ்னா இமாயில்லாஹ் தனது வாக்குதியை முழுமையாக நிறைவேற்றியுள்ளது. ஆனால் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மீது ஒரு புகார் உள்ளது. ஆனால் அவர்களும் தமது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டனர். அப்படி சிறிது பாக்கி இருந்தாலும் அவர்கள் தமது வாக்குறுதியை விரைவில் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பள்ளிவாசல் ஸஃபீல்ட் பகுதியில் கட்டப்பட வேண்டும் என்று கூறினேன். அங்கு 1982 முதல் ஜமாஅத் உள்ளது. இப்போது இன்னொரு இடமும் மஸ்ஜிதுக்காக 2006 -ல் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்திலும் 5 இலட்சம் பவுண்டில் மஸ்ஜித் தயாராகி வருகிறது. ஒரு சில மக்கள்தான் 2006 -ல் இருந்தனர். இப்போது அல்லாஹ்வின் அருளால் 200 பேர் இருக்கின்றனர். அந்த பள்ளியிலும் 300 பேர் தொழக்கூடிய அளவுக்கு இடவசதி உள்ளது. இன்னொரு இடத்தில் ஒரு தொழுகை Centre வாங்கப்பட்டுள்ளது. விரைவில் மஸ்ஜித் ஆகி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. விரைவில் உருவாவதற்கு அல்லாஹ் தவ்ஃபீக் வழங்குவானாக. நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறோம். முழு உலகிலும் அஹ்மதிகளிடம் மஸ்ஜித் கட்டுவதன் பக்கம் கவனம் ஏற்படுகிறது. இதில் U.K.மக்களும் அடங்குவர். அல்லாஹ் உங்களுக்கு நான் கொடுத்த இலக்கினை விரைவில் நிறைவேற்ற தவ்ஃபீக் வழங்குவானாக. ஆனால், எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் கட்டுவது ஒரு கட்டிடம். ஓர் அழகிய கட்டிடம். அதுவே போதுமானதா? இந்த விஷயம்

நமக்கு ஹதீஸிலும் சொல்லப்பட்டுள்ளது. நம்மை வெகுமதிக்கு வாரிசாக்குகிறது. உலகில் ஒருவர் அல்லாஹ்வின் வீட்டை உருவாக்கினால் மறு உலகில் அவர் தனக்காக ஒரு வீட்டை உருவாக்குகிறார். நிச்சயமாக பள்ளிவாசல் கட்டுவது ஒரு வேலையாகும். அல்லாஹ்வுக்கு மிகவும் பிடித்தமான பணியாகும். அதனால்தான் அல்லாஹ் மறுவுலகில் அதற்குப் பகரமாக ஒரு வீட்டை தருவதாக நற்செய்தி கூறுகிறான். ஆனால் எந்த நோக்கத்திற்காக இந்த வீட்டைக் கட்ட அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளானோ அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதும் மிக மிக அவசியமாகும். நமது நிய்யத்தை தூய்மையாக்கி உணர்வை உருவாக்க வேண்டும். அல்லாஹ் உள்ளங்களின் நிலைமைகளை நன்கறிந்தவன். அடியான் இந்த வேலையை செய்வதில் அவனுடைய நிய்யத் என்னவென்று அல்லாஹ்வுக்கு தெரியும். அந்த இறைவனுக்காக களங்கமற்ற தூய உள்ளத்தை உருவாக்குவது அவசியமாகும். அதில் அவனது திருப்தியைப் பெறும் எண்ணம் நிரம்பி இருக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக மட்டுமே அல்லாஹ்வுக்குரிய கடமை, அடியாருக்குள்ள கடமையை நிறைவேற்றும் எண்ணம் இருக்க வேண்டும். எனவே நான் நம்புகிறேன். மஸீஹே முஹம்மதின் அடிமையாக இருப்பதால் ஓர் அஹ்மதியின் உள்ளத்தில் நிச்சயமாக அந்த எண்ணம் இருக்கும். இங்கு பள்ளிவாசல் கட்டும்போதும் ஓர் அஹ்மதியின் உள்ளத்தில் இந்த எண்ணம்தான் இருந்திருக்கும் என்று நம்புகிறேன். ஏனெனில் அந்த உணர்வு இல்லையெனில், அல்லாஹ் இந்த பள்ளிவாசலைக் கட்டியதற்காக மறு உலகில் ஒரு வீட்டை தருவானா என்ற கேள்விக்கே இடமேது? இந்த உலகிலேயே தூய்மையின் அடித்தளத்தில் இறை திருப்திக்காக கட்டப்படாத அப்பள்ளிவாசலை இடித்துப்போட கட்டளை உள்ளது. எதிரிகளாகிய நயவஞ்சகர்கள் உலகை ஏமாற்றுவதற்காக அல்லாஹ்வின் பெயரால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அதனை இடித்து விடுமாறு இறைவன் கட்டளையிட்டான். அதனைப் பற்றி குறிப்பிட்டவாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

(ஹுஸூர் அவர்கள் திருக்குர்ஆனின் அத்தவ்பா அதிகாரத்தில் 107 முதல் 109 வரையுள்ள வசனங்களை அரபியில் ஓதினார்கள்.)

அதன் பொருள்: தீங்கிழைக்கவும், நிராகரிப்பிற்கு உதவவும், நம்பிக்கையாளருள் பிரிவினை உண்டாக்கவும், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்த்து முன்னர் போராடியவருக்குப் பதுங்குமிடமாகவும் பள்ளிவாயில் ஒன்றைக் கட்டியவர்கள் நாங்கள் நன்மையையே நாடுகிறோம் என்று நிச்சயமாக சத்தியம் செய்வார்கள். ஆனால் நிச்சயமாக அவர்கள் பொய்யுரைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அல்லாஹ் சாட்சி பகர்கின்றான்.

(நபியே!) நீர் அந்த மஸ்ஜிதில் ஒருபோதும் நிற்க வேண்டாம். ஆரம்ப நாளிலிருந்தே இறையச்சத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட பள்ளி தான் (தொழுகை நடத்துவதற்காக) நீர் நிற்பதற்கு மிகவும் தகுதி வாய்ந்ததாகும். முற்றிலும் தூயவர்களாக வேண்டுமென்று விரும்புபவர்கள் அதில் (வருபவர்களாக) இருக்கின்றனர். முழுமையான தூய்மையை மேற்கொள்பவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்.

தனது அடித்தளத்தை இறையச்சம் மற்றும் இறை திருப்தியின் அடிப்படையில் அமைத்துள்ளவன் சிறந்தவனா? அல்லது தன் அடித்தளத்தை நரக நெருப்பில் சரிந்து விழக்கூடிய வழுக்கலான விளிம்பில் அமைத்தவ(ன் சிறந்தவ)னா? மேலும் அல்லாஹ் அநீதியிழைக்கும் சமுதாயத்தினர்க்கு வழி காட்டுவதில்லை. (9:107-109)

நாம் மஸீஹே முஹம்மதின் அடியார்கள் என்று கூறிக்கொள்கிறோம். உலகில் இக்காலத்தில் அன்னாரை அல்லாஹ் தன்னைப் பற்றி புரிய வைப்பதற்காக அனுப்பினான். அவர் உலகில் வந்ததன் நோக்கம் அடியானை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதுதான். படைப்பினங்களின் இறைவனுக்குரிய உரிமையை நிறைவேற்றுதல், படைப்பினங்களுக்கு அதற்குரிய உரிமையை வழங்குவதன் பக்கம் கவனமூட்டுதல் போன்றவை அன்னார் உலகில் வந்ததன் நோக்கம் ஆகும். நமது பள்ளிவாசல்கள் கஷ்டத்தை தருவதாகவும் பிரச்சனைக்கு காரணமாகவும் இருக்கும் எனில் அல்லது அல்லாஹ் காப்பானாக. குஃப்ரின்

போதனையாக இருக்குமெனில் மூஃமின்களிடம் பிரிவினை உண்டாக்குவதற்கு அப்பள்ளிவாசல் காரணமாக இருக்கும் எனில் அல்லது அல்லாஹ், ரஸூலின் எதிரிகளுக்கு அடைக்கலம் தரக்கூடியதாக அப்பள்ளிவாசல் இருக்கும் எனில் நாம் ஒருபோதும் அப்பள்ளிவாசல் கட்டியதற்காக நன்மையை எதிர்பார்க்க முடியாது. தீமை செய்பவர்களாக இல்லாத நிலையில் இந்தப் பள்ளிவாசலை நாம் கட்டியிருப்போம் எனில், முன்னரை விட அதிகமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச் செய்தியை உலகில் பரப்பியவர்களாவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக எந்த மஸீஹ் வரவிருந்தார்களோ – உலகில் கஷ்டத்தை அகற்ற வரவிருந்தார்களோ அந்த மஸீஹ் வந்து விட்டார்கள். நாம் அவரது ஜமாஅத்தின் அன்பர்கள், அவர்களை ஏற்றவர்கள் ஆவோம். நாம் பிறருக்கு கஷ்டம் தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. முஹப்பத் – அன்பின் செய்தியை பரப்பவேண்டியவர்களாவோம். நாம் ஒரு முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களாவோம். சத்தியத்தை வெளிப்படுத்தி மார்க்கச் சண்டைகளை தீர்த்து வைத்து சமாதானத்தின் அடிப்படையை ஏற்படுத்துவதற்காக அல்லாஹ் என்னை அனுப்பினான் என்று அந்த மஸீஹ் பிரகடனம் செய்தார்கள். எனவே நமது பள்ளிவாசல்கள் அந்த போதனையை பிரச்சாரம் செய்வதாக இருக்க வேண்டும்.

அன்பு, நேசம், சகிப்புத்தன்மையின் அடிப்படையைப் போதிக்கின்ற போதனைகளை நமது பள்ளிவாசல்கள் பரப்ப வேண்டும். நாம் எப்போதும் சமாதானக் கரம் நீட்டி உலகிற்கு அமைதியை ஏற்படுத்த விரும்புபவர்கள் ஆவோம். நாம் உலகின் துன்பத்தை போக்குவதற்காக எப்போதும் தியாகம் செய்து வந்துள்ளோம். எப்போதும் செய்து கொண்டே செல்வோம். இன்று உலகில் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே துன்பத்தை அகற்றும் பணியில் முதல் வரிசையில் நிற்கும் இயக்கமாகும். இம்மக்கள் இதனை அறிவர். காரணம் நாம் அமைதியை விரும்புபவர்கள் என்பதனை இவர்கள் புரிந்துள்ளனர். மேலும் நாம் எல்லாரும் அவ்விஷயத்தில் முன்னணியில் நிற்பவர்கள் என்று கூறுவேன். நமது சேவை இழப்பில்லாதது. எந்தவித பாகுபாடுமின்றி எல்லா இடத்திலும் நமது சேவை செய்யப்பட்டுள்ளது. ஆப்பிரிக்காவில் HUMANITY FIRST மூலம் சேவை செய்து வருகிறோம். தீபகற்பங்களில் சேவை செய்து வருகிறோம். தென் ஆப்பிரிக்காவில் சேவை செய்து வருகிறோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் Engineer –கள் அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் மிகுந்த சேவை செய்து வருகின்றனர்.

எல்லா இடங்களிலும் மக்களின் துயர் துடைப்பு நமது இலட்சியப் பணியாக இருந்து வருகிறது. குடி தண்ணீர் இல்லாத இடங்களில் குடி தண்ணீர் ஏற்பாடு செய்துள்ளோம். சுருக்கமாக, எண்ணற்ற சேவைகளை அஹ்மதிய்யா ஜமாஅத் இறை அருளால் செய்து வருகிறது.

பிறகு நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

அல்லாஹ்வின் திருப்திக்காக உருவாகாத ஒரு பள்ளிவாசல் குஃப்ரை பரப்பக் கூடியதாகும். நமது பள்ளிவாசல் ஒரே இறைவனின் இபாதத்தின் கடமையை நிறைவேற்றி வரும் நிலையில் நமது பள்ளிவாசல்கள் மனிதனின் பிறப்பின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படுகிறது. அந்த பிறப்பின் நோக்கம் ஒரே இறைவனுக்கு இபாதத் செய்வதாகும். இந்தப் பகுதிகளில் மற்ற முஸ்லிம்களும் கணிசமாக உள்ளனர். மற்ற மஸ்ஜிதுகள் பல இருப்பதையும் கூறினேன். அவற்றில் ஒரு பிரிவுக்கு நமது பள்ளிவாசல் உருவாவது பிடிக்கவில்லை. எனவே கட்டும்போதே நமது பள்ளிவாசலைச் சேதப்படுத்த முயன்றனர். சில முஸ்லிமல்லாதவர்களும்கூட அம்முயற்சி செய்து வந்தனர். ஆனால், அவர்களின் இச்செயல் நம்மை முன்பைவிட அதிகமாக இறைவனுக்குரிய கடமையை நிறைவேற்றுபவர்களாக ஆக்க வேண்டும். இறை தொடர்பை முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வழிகாட்டலை கவனத்தில் கொள்ள வேண்டும். அதன்படி அமல் செய்ய முயற்சி செய்பவர்களாக நாம் மாற வேண்டும். நாம் உலகிற்கு அறிவிக்க வேண்டும். தமது வருகையின் நோக்கத்தை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

களங்கமற்ற முறையில் மின்னும் உன்னதமான தவ்ஹீது – ஒவ்வொரு **ஷி**ர்க்கிலிருந்தும் தூய்மையாக்கப்பட்ட தவ்ஹீது இப்போது வேரறுந்து போய் விட்டது. அதனை மீண்டும் நிரந்தரமாக திரும்ப நடுவதற்காக நான் வந்துள்ளேன்.

இதுதான் அன்னாரின் பணியாகும். தூய களங்கமற்ற தவ்ஹீது உலகில் இருந்து அகன்று விட்டது. அதனை நிலைநாட்டுவது மட்டும் அவர்களது பணியல்ல. அதனை ஒருபோதும் காய்ந்து போகாமல் வைப்பதும் அவர்களின் பணியாகும். நாம் அவர்களின் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் என்று வாதிடுகின்றோம். நாம் அந்த மரத்தின் கிளைகளாவோம். எதுவரை நாம் அந்த பசுமையான மரத்தின் பசுங்கிளைகளாக இருப்போமோ அதுவரை அந்த கடமையை நிறைவேற்றியவர்களாவோம். தவ்ஹீதின் கடமையை நிறைவேற்றி அம்மரத்துடன் இணைந்திருப்போம். அதுவன்றி காய்ந்த கிளைகள் போன்று தனித்துப்போய் விடுவோம். ஆகவே, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்து நமக்கும் மற்றவருக்கும் நமது சொல், செயல் மூலம் நாங்கள் ஒரே இறைவனுக்காக பள்ளிவாசல் கட்டக்கூடியவர்கள். **ஷி**ர்க்கை முடிவுக்கு கொண்டு வருவதற்காக எல்லா தியாகமும் செய்பவர்கள். உலகில் நிரந்தரமாக குஃப்ர் அழிவதற்காக பாடுபடுபவர்கள் என்று நிரூபித்துக் காட்ட வேண்டும். பிறகு இறைவன் கூறுகின்றான். பள்ளிவாசல் கட்டுவது மூமின்களுக்கிடையில் பாகுபாடு, பிளவு ஏற்படுத்துபவர்களின் பணியல்ல. ஆகவே நாம் இன்று ஒவ்வொரு அஹ்மதியும் முழக்கமிட வேண்டும். வெறும் முழக்கம் மட்டும் போதாது. நமது ஒவ்வொரு சொல், செயல் மூலம் அதனை வெளிப்படுத்தவும் வேண்டும். நாம் அன்பின் கொடியை பிடிப்பவர்கள், நாம் உள்ளங்களை இணைப்பவர்கள், குழப்பங்களை உலகிலிருந்து துடைப்பவர்கள். குறிப்பாக தமது சமுதாயத்தில் இருந்து அதனை அகற்றுபவக்ள் என்று வெளிப்படுத்த வேண்டும். **ருஹ்மாவும் பைனஹும்** (தங்களுக்கிடையில் அன்பை பரிமாறுபவர்கள்) என்பதை அமல்படுத்திக் காட்ட வேண்டும். அப்போதுதான் தக்வாவின் அடித்தளத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசலாக இது அமையும். அப்போதுதான் நமது தப்லீக் மற்றவர்களின் உள்ளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். அப்போதுதான் அறியாமை, தவறான வழிகாட்டலின் காரணமாக உள்ளத்தில் நம்மைப் பற்றி சந்தேகம் விதைக்கப்பட்டுள்ள நமது முஸ்லிம் சகோதரர்களின் உள்ளத்தை நாம் வெல்ல முடியும். ஏனெனில் இப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப அவர்களின் உண்மைப் பேரன்பர் முஹம்மதிய மஸீஹ்தான் எல்லா முஸ்லிம்களையும் ஒரே சமுதாயமாக மாற்றும் பணியை செய்யத் தகுந்தவர். அந்த மஸீஹே முஹம்மதின் ஜமாஅத்தின் பொறுப்பு என்னவென்றால், அவர்கள் உண்மையான முஸ்லிமின் பொறுப்பை நிறைவேற்றுவர். அல்லாஹ், அவனது ரஸுலின் உண்மையான போதனையை செயல்படுத்துங்கள். தக்வாவில் அடியெடுத்து வையுங்கள். பள்ளிவாசல்களின் அடித்தளம் இறையச்சம், திருப்தி என்று கூறிய அந்த முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். அதுவன்றி மஸ்ஜித், தக்வா இல்லாமல் உருவாக்கப்படும் எனில் அது நரகத்தின் விளிம்பில் கட்டப்பட்ட பள்ளிவாசலாகும்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதுபற்றி விளக்கமளிக்கும் போது கூறினார்கள்.

ஆற்றின் கரை தண்ணீரில் முடிகிறது. அதில் பலருக்கு பயனுள்ளது. ஆனால் நயவஞ்சகத்தின் கரையில் நெருப்பு தான் உள்ளது.

மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்காக உருவாக்கப்படவில்லையெனில், அந்த பள்ளிவாசல்கள் நெருப்பில் விழக்கூடியபள்ளிவாசல் என்று அல்லாஹ் கூறுகிறான். நாம் நயவஞ்சகத்திலிருந்து தூய்மையாகி குறிப்பாக அல்லாஹ்வுக்காக இபாதத் செய்பவர்கள். எனவே தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு சொர்க்கத்தில் ஒரு வீட்டை உத்தரவாதமாக பெறக்கூடியவர்களின் மஸ்ஜித் ஆக அஹ்மதிகளாகிய நமது மஸ்ஜிதுகள் விளங்க வேண்டும். அல்லாஹ் நயவஞ்சகர்கள் பற்றி கூறும்போது அவர்கள் மூஃமின்களுக்கு ந**ஷ்**டம் ஏற்படுத்த விரும்புகிறார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் முனாஃபிக்குகளின் முயற்சி செயலற்றுப் போயிற்று. வருங்காலத்திலும் ஒரு தூய மூஃமின் ஈமானை வெளிப்படுத்துவார் எனில், தக்வாவில் நிலைநிற்பார் எனில் அவர் காலத்திலும், இறைவன் மூஃமின்களின் ஜமாஅத்திற்கு ஒவ்வொரு வி**ஷ**மங்களில்

இருந்தும் பாதுகாப்புத்தர உத்தரவாதம் தருகிறான் என்ற ஆறுதலை இறைவன் வழங்கியுள்ளான். ஆனால் இங்கு மூஃமின்களுக்கும் ஒரு பொறுப்பு தந்துள்ளான். மஸ்ஜிதுந் நபவியின் உதாரணம் உங்கள் முன் உள்ளது. அதன் அடித்தளம் தக்வாவாக இருந்தது. எளிமை மற்றும் துஆ மூலம் அப்பள்ளிவாசல் எழுப்பப்பட்டது. தக்வாவை நிலைநிறுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. வருங்காலத்திலும் மூஃமின் தன் முன்னால் இந்த முன்மாதிரியை வைத்து செயல்படட்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் சஹாபாக்கள் அப்பள்ளிவாசலுக்கு அடித்தளமாக பயன்படுத்திய அம்முன்மாதிரியை கண்முன் வைத்து செயல்படட்டும். அதுவன்றி உலகில் எந்த மஸ்ஜிதும் உங்களுக்கு இறை நெருக்கத்தைப் பெற்றுத் தந்து விடாது. எனவே அல்லாஹ்வுடைய அன்பைப் பெறுவதற்காக உள்ளங்களை தூய்மையாக வைக்க விரும்புதல், அதற்காக தக்வாவில் அடியெடுத்து வைத்தல் மிகமிக அவசியமாகும். எனவே மஸ்ஜித் உருவாக்குகிற ஓர் அஹ்மதி எப்போதும் ஒரே இறைவனை இபாதத் செய்வதுதான் இதனைக் கட்டுவதன் நோக்கம் என்பதனை மனதில் கொள்ள வேண்டும். தக்வாவில் சென்று அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே நோக்கமாகும். தக்வா என்றால் என்ன? முத்தகி என்பவர் யார்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகிறார்கள்:**

அல்லாஹ்வின் பயத்தால் அவன் திருப்திப்படுவதற்காக – எந்த ஒரு மனிதர் ஒரு தீமையிலிருந்தும் விலகியிருப்பாரோ அவரே முத்தகி ஆவார்.

இன்னோர் இடத்தில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆன் தக்வாவை போதிக்கிறது. அதுவே திருக்குர்ஆனின் அடிப்படை நோக்கமாகும். ஒரு மனிதன் தக்வாவை கைக்கொள்ளவில்லையெனில், அவனது தொழுகை பயனற்றது. அதுவும் நரகத்திற்கு கொண்டு செல்லக்கூடியதேயாகும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் அதிலிருந்து பாதுகாப்பானாக.

தொழுகை பயனற்றதாகப் போவது மட்டுமின்றி நரகத்திற்கு கொண்டு செல்லக் கூடியதாகவும் ஆகி விடும். நாம் மஸ்ஜித் உருவாக்குகிறோம். அதன் அடிப்படை நோக்கம் தக்வாவை நிலைநாட்டுவதாக இருக்க வேண்டும். தக்வாவை பெறுவதற்காகவே ஒரு முஸ்லிம் தொழுகிறார். அதற்காகவே இறைவன் அவருக்கு சொர்க்கத்தில் வீட்டை தருகிறான். முதலில் நினைவில் கொள்ள வேண்டும். பள்ளிவாசல் கட்டுவதற்கு நிய்யத் தூயதாக இருக்க வேண்டும். எந்த வகையான குழப்பமும் பிளவும் நோக்கமும் மஸ்ஜிதை கட்டுபவருக்கு இருக்கக் கூடாது. தொழுபவரிடம் தக்வா இல்லையெனில் நீங்கள் வெளிப்படையாக தொழுவது என்னவோ உண்மைதான். ஆனால் அது பயனற்றது.

**இன்னோர் இடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:**

எங்கு தக்வா இல்லையோ அங்கு நற்செயல்களில் எந்த நன்மையும் இல்லை.

எனவே, நாம் நிறைய பள்ளிவாசல் கட்டி விட்டோம் என்று மகிழ்ச்சி அடைந்து விடக்கூடாது. தூரத்திலிருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய தனிச் சிறப்புமிக்க பள்ளிவாசலை கட்டி விட்டோம் என்று பெருமிதம் கொண்டு விடக்கூடாது. அசல் அழகை வெளிப்படுத்துவதற்கு நாம் தக்வாவில் சென்றவாறு இந்த மஸ்ஜிதின் கட்டுமானத்தின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக மாற வேண்டும். தக்வாவின் வழியில் காலெடுத்து வைத்து அந்நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். எனவே ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். இந்த மஸ்ஜிதுடன் குறிப்பாக நாம் அல்லாஹ்வுக்காக மட்டும் தொழுகையை நிறைவேற்றுபவர்களாக மாற முயற்சி செய்ய வேண்டும். முன்னரை விட அதிகமாக சகோதரத்துவம் அன்பு நம்மிடையே உருவாக வேண்டும். அல்லாஹ்வின் திருப்திக்காக ஒருவர் மற்றவரின் தவறை பகிரங்கப்படுத்தாமல் விட வேண்டும்; மன்னிக்க வேண்டும். நமது உள்ளங்களை எல்லா வகை பொறாமைகள், காழ்ப்புணர்ச்சிகளில் இருந்து தூய்மைப்படுத்த வேண்டும். நம்மவர் மற்றவரின் உரிமைகளை வழங்க வேண்டும். எளிமை, தாழ்மைக் குணம் உள்ளத்தில்

உருவாக வேண்டும். அப்போதுதான் இந்த மஸ்ஜிதின் கட்டுமானம் நமக்கு பயன் தரும். சொர்க்கத்தில் நமக்கு இதற்காக ஓரிடம் கிடைக்கும். அப்போதுதான் நமது தொழுகைகள் இறைவனின் ரஹ்மத்தை ஈர்த்துக் கொண்டு வரும்.

இந்த தகுதியைப் பெறவும், இதில் நிலைநிற்கவும் கூடிய வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. நாம் ஆரம்பத்தில் ஓதிய வசனத்தில் மூஃமின்களுக்கு இரு முக்கிய கட்டளைகளை இடுகின்றான். அந்த கட்டளைகள் குர்ஆனின் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை தொடர்ந்து பல்வேறு கோணத்தில் விளக்கப்பட்டுள்ளன. அந்த இரு கட்டளைகளில் முதலாவது கட்டனை தொழுகையை நிலைநாட்டுவது. இதுபற்றி முதலில் நான் கூறி விட்டேன். இந்த பள்ளிவாசலைக் கட்டிய பிறகு தக்வாவுடன் தொழுகையை நிலைநாட்டுவது ஒவ்வொரு மூஃமினின் பர்ளாகும். இதுவே பிறகு மேலும் தக்வாவை அதிகரிக்கும். தொழுகையின் தத்துவம் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

தொழுகை என்றால் என்ன? அது துஆவாகும். தஸ்பீஹ், தஹ்மீது, தக்தீஸ், இஸ்திக்ஃபார், தரூது ஆகியவற்றுடன் இறைவனிடம் அது வேண்டப்படுகிறது. நாம் தொழ ஆரம்பித்ததும் அறியாதவர்களைப் போன்று நாமும் வெறும் அரபி வார்த்தைகளை உச்சரித்துவிட்டால் போதாது. ஏனெனில் அத்தகைய தொழுகை, துஆ அனைத்தும் வெறும் சடங்காகும். அதில் எந்த உண்மையில்லை. எனவே நீங்கள் தொழும்போது இறைவார்த்தையாகிய குர்ஆனிலிருந்து சில வார்த்தைகளை கூறுவதுடன், ரஸுலின் சில வார்த்தைகளை கூறுவதுடன் நமது மீதி துஆக்களை நமது சொந்த வார்த்தைகளில், நமது தாய்மொழியில் மிகவும் தாழ்மையுடன் கேட்கவும் வேண்டும். அதன் மூலம் உள்ளத்தில் உருக்கமும் தாக்கமும் ஏற்படும். அப்போது தக்வாவின் தகுதியும் உயரும். எனவே அல்லாஹ்வின் நெருக்கம் பெறுவது தொழுகையைப் புரிந்து தொழுவதன் மூலமே நடக்கும். எனவே இந்த பள்ளிவாசல் கட்டிய பிறகுதான் உங்கள் பொறுப்பு அதிகமாகும். அந்நிலையில் நிச்சயமாக நம்மைப் பற்றி மக்களிடம் ஓர் அறிமுகம் ஏற்படும். தப்லீகின் புதிய வழிகள் திறக்கும். அதற்காகவும் உங்கள் இபாதத்தின் தகுதியை உயர்த்த வேண்டும். அதன் மூலம் இறைவனின் அருளின் மழை முன்பிலும் அதிகம் ஏற்படும். இந்த தொழுகையின் காரணத்தால் உங்கள் சீர்திருத்தத்துடன் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எடுத்து வைக்கும் சிறந்த வாய்ப்பு கிடைக்கும். பிறகு நல்ல விளைவும் அல்லாஹ் நாடினால் வெளிப்படும்.

இந்த வசனத்தில் இறைவன் கூறியுள்ள இன்னொரு கட்டளை பற்றி கூறுகிறேன்.

ஒரு வியத்தகு ஒப்புமை என்னவென்றால், பிராட்போர்ட் மஸ்ஜிதின் அடிக்கல் நாட்டு விழாவும், ஹாட்லிபூல் மஸ்ஜிதின் அடிக்கல் நாட்டு விழாவும் ஒரே காலத்தில்தான் நான் செய்தேன். முதல் நாள் பிராட்போர்ட் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டிவிட்டு, மறுநாள் ஹாட்லிபூல் பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டினேன். ஆனால் ஹாட்லிபூல் மஸ்ஜித் இரு வருடம் முன்பே கட்டி முடிக்கப்பட்டது. அது சிறிய பள்ளிவாசலாகும். எனவே சீக்கிரம் முடிந்து விட்டது. ஆனால் பிராட்போர்ட் பள்ளிவாசல் கட்டி முடிய சிறிது காலம் பிடித்தது. நான் கூற விரும்புவது, ஹாட்லிபூல் பள்ளிவாசலின் திறப்பு விழாவில் இறை விருப்பத்துடன் நடந்த ஒரு தற்செயலான ஒற்றுமை நிகழ்வு அன்று நான் தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டை தொடங்கினேன். இலண்டனுக்கு வெளியில் தஹ்ரீகே ஜதீதின் புது வருட அறிவிப்பு அப்போது அப்பள்ளிவாசலில் செய்யப்பட்டது. இப்போது இந்த பள்ளிவாசலின் திறப்பு விழாவிலும் தற்செயலாக ஓர் ஒற்றுமை, நாம் தஹ்ரீகே ஜதீதின் பழைய வருடம் முடிந்து புது வருடம் தொடங்கும் நாளாக ஆகி விட்டது.

தஹ்ரீகே ஜதீத் உருவாக்கப்பட்டதன் நோக்கமே, அஹ்மதிய்யத்தின் எதிரிகளின் பகைமை அதிகரித்ததுதான். அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீதைத் தொடங்கி வைத்தபோது எதிரிகள் அஹ்மதிய்யத்தை முடிவுக்குக் கொண்டுவர பெரும் திட்டங்களைத் தீட்டியவாறு இருந்தனர். அந்நிலையில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஜமாஅத்திற்கு முன்னால் இந்த திட்டத்தை வைத்தார்கள். இந்த திட்டத்தால் ஜமாஅத் இந்தியாவுக்கு

வெளியில் மிக வேகமாக பரவியது. இன்று நாம் மிஷன் ஹவுஸ்கள் திறக்கிறோம். பள்ளிவாசல் கட்டுகிறோம். தொழுகை Centre –களை கட்டுகிறோம். ஜமாஅத்தின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. உண்மையில் இவையனைத்தும் அத்திட்டத்தின் கனிகளேயாகும். இன்று உங்களுக்கு புதிய உத்வேகத்துடன் நீங்கள் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. அத்துடன் அதே உணர்வுடன் தப்லீகும் செய்ய வேண்டும். அதே வேகத்துடன் பொருள் தியாகமும் செய்ய வேண்டும். அதுவே உண்மையான நன்றி செலுத்துதல் ஆகும். அதுவே எதிரிகளின் முயற்சிகளுக்கு சரியான பதிலடியாகும்.

நான் ஓதிய வசனத்தில் வருகிறது. அதில் இறைவன் இதைத்தான் கூறுகிறான். பொருள் தியாகம் செய்யுங்கள். அறிவுள்ளவர் அறிவர். பொருளை செலவு செய்தல் என்பதன் பொருள் இறைவழியில் செலவு செய்தலாகும். இதன் மூலம் தப்லீகின் தேவைகள், வெளியீடுகளின் செலவுகள் ஈடு செய்யப்படும். பள்ளிவாசல்கள், புதிய பிரச்சார நிலையங்கள் திறக்க முடியும். முபல்லிகின்களை உருவாக்க முடியும். முதலில் காதியானிலும் ரப்வாவிலும் இரு ஜாமியாக்கள் இருந்தன. இப்போது முபல்லிகீன்களின் புதிய தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல இடங்களில் ஜாமியாக்கள் முபல்லிக்குகளை உருவாக்குவதற்காக திறக்கப்பட்டுள்ளன. பிரிட்டன் அத்தகைய நற்பேறு பெற்ற நாடுகளுள் ஒன்றாகும். இங்கு ஜாமியா அஹ்மதிய்யா (அஹ்மதிய்யா அரபி பாடசாலை) திறக்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இறைவன் கூறுகிறான்.

நீங்கள் பொருள் செலவு செய்யுங்கள். வெறுமனே அதனை மட்டும் செய்துவிட்டு உட்கார்ந்து விட வேண்டாம். நிரந்ரமாக உங்களுக்கு தொழுவது கடமையாக இருக்கிறது. அதன் மூலமே இறைநெருக்கம் கிடைக்கும். தூய்மையான முறையில் இறைவனை இபாதத் செய்ய வேண்டியுள்ளது. அதேபோன்று பொருள் தியாகம் செய்வதும் அவசியமாகும். ஒரே ஒருமுறை கொடுத்து விட்டால் உங்கள் கடமை முடிந்து விடாது. ஒரே ஒரு பள்ளிவாசல் கட்டி விட்டு பிறகு பொருள் தியாகம் குறைந்துவிடக் கூடாது. சிறிது Literature –களை வெளியிட்டு நாம் நிறைய செய்து விட்டோம் என்று நினைத்து விடக்கூடாது. இப்போது அல்லாஹ் தப்லீகிற்கான புதிய வழிகளை திறந்து கொண்டிருக்கின்றான். எனவே அதற்காக செலவு செய்ய வேண்டியுள்ளது. அந்த புதிய வழிகளுள் M.T.A –வும் ஒன்றாகும். அதனால் நேரடியாக முழு உலகமும் குத்பாவை கேட்டு விடுகின்றது. அது இந்த நகரில் இருந்து நடக்கிறது. தப்லீகில் M.T.A. –விற்கு முக்கிய பங்கு உள்ளது. உலகில் இதனால் அஹ்மதிய்யத் பற்றி அறிமுகம் கிடைப்பது மட்டுமின்றி பெரும்பாலான இடங்களில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. முக்கிய நகரங்களில் அஹ்மதிய்யத்தை கொண்டு சேர்ப்பது போதுமானதன்று. நான் உலகில் ஒவ்வொரு கிராமம், ஊர், தெருக்களிலும் கொண்டு சேர்க்க வேண்டியுள்ளது. அதற்காக பெரும் தியாகம் கண்டிப்பாக தேவை. அதற்காக துஆவும் செய்ய வேண்டும். எனவே நீங்கள் உறுதிமொழி எடுத்துள்ளீர்கள். உயிர், பொருள், கண்ணியம் அனைத்தையும் தியாகம் செய்வேன். எனவே, எந்த இலக்கும் இல்லாமல் நீங்கள் தியாகம் செய்ய வேண்டியதில்லை. அல்லாஹ்வின் மார்க்கத்தின் தூதுச் செய்தியை பரப்புவதற்காக செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை உலகில் நிலைநாட்டுவதற்காக தியாகம் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் அருள் அவன் ஜமாஅத் அன்பர்களின் உள்ளத்தில் பொருள் தியாகம் செய்வதற்குரிய ஒரு புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளான். வீழ்ச்சியால் திணறிக் கொண்டிருக்கின்றது. அஹ்மதிகளிடம் அல்லாஹ் கூறுகிறான். உங்கள் இபாதத்துகள் பொருள் தியாகங்கள் பெரும் பொருளாதார வீழ்ச்சிகளின் தீய தாக்குதல்களிலிருந்து உங்களை பாதுகாக்கும்.

ஏனெனில் மூஃமின் பார்வை தனது கடைசி நிலையை இறுதி இலக்கை நோக்கி இருக்கிறது; இருக்க வேண்டும். அதற்காகவே இறைவன் கூறுகிறான். உலக வணிகங்கள் உங்ளுக்கு உதவாது. உங்கள் நட்பும் உங்களுக்கு பயனளிக்காது. மாறாக இறைதிருப்தியைப் பெறுவதற்காக செய்யும் இபாதத்துகள் பொருள் தியாகங்கள்தான் பயனளிக்கும்.

அல்லாஹ்வுடைய பெரிய கருணை ஜமாஅத்தின் மீது அஹ்மதிகள் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பதுதான் பொருள் தியாகத்தின் சுமை சில வேளை அவர்களுக்கு எவ்வளவு அதிகமாகி விடுகிறது எனில் சில வேளை மிக அதிகமாகி விட்டதாக தோன்றுகிறது. ஆனால் பொருள் தியாகம் செய்யும் அஹ்மதிகளின் வழக்கமும், பொருள் தியாகம் செய்பவர்களின் எண்ணிக்கையும் ஜமாஅத்தில் அதிகரித்து விட்டது. செய்து கொண்டே செல்கின்றனர். பள்ளிவாசல்கள் கட்டும் பணியிலும் பலர் பங்கெடுத்துள்ளனர். இங்குள்ள பலரை நான் அறிவேன். அவர்களிடம் உள்ளதையெல்லாம் பள்ளிவாசலுக்காக தரக்கூடியவர்கள். பிறகு நான் உங்கள் நஃப்ஸுக்கும் ஒரு உரிமையுள்ளது என்று அவர்களிடம் கூற வேண்டி வந்தது. அதனையும் வழங்குங்கள். தஹ்ரீகே ஜதீதின் நிதியாண்டு அக்டோபர் 31 -ம் தேதியுடன் முடிவடைவது உங்களுக்குத் தெரியும். புதிய வருடத்தின் அறிவிப்பு வந்ததும் குத்பாவை எதிர்பார்த்துக் காத்திருந்து தமது வாக்குறுதிகளை வழங்குபவர்கள் உள்ளனர். பிறகு பணத்தை தயாராக வைத்துக் கொண்டு அறிவிப்பு வெளியானதும் வாக்குறுதியுடன் அப்போதே தந்து விடுபவர்களும் இருக்கின்றார்கள் என்பதை நான் அறிவேன். இன்னும் சிலர், கடன் வாங்கி நமது செலவை சமாளித்து விடலாம். ஆனால் சந்தா வாக்குறுதியை கடன் வாங்கி தர இயலாது என்று நினைத்து பணம் வந்ததும் தந்து விடுபவர்களும் உள்ளனர். ஆனால் நமது நஃப்ஸுக்குள்ள கடமையை நிறைவேற்றுவதும் அவசியம். ஆனால், ஒவ்வொருவருக்கும் தமது இறைவனுடன் உள்ள தொடர்பு தனித்தனியானது. எனவே அவ்வாறு தருபவர்கள் பலர் சிரமப்படுபவர்களும் ஆவர். எனவே, சந்தாவை திரும்ப பெற்றுக் கொள்ளுங்கள் என்று நான் கூறவில்லை. உங்கள் மனைவிமக்களின் உரிமையையும் நிறைவேற்றுங்கள் என்று அவர்களிடம் நான் கூறும்போது அவர்கள் நாங்கள் இவ்வாறு இறைவனிடம் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தோம் என்கின்றனர். இத்தகையோரின் மனைவிமார்களும் பொருள் தியாகம் செய்வதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாகவே விளங்குகின்றனர். அஹ்மதி பெண்கள் ஆண்களை விட பொருள் தியாகத்தில் மிகவும் முன்னேறிச் சென்று விட்டனர். மாஷா அல்லாஹ். லஜ்னாக்கள் தமது வாக்குறுதியை முழுமைப்படுத்தியிருப்பதாக அமீர் சாஹிப் ரிப்போர்ட் தந்துள்ளார்கள். இதே போன்று ஜெர்மனியில் பெர்லின் மஸ்ஜித் கட்டுமானத்திலும் U.K. லஜ்னாக்கள் ஒன்றே முக்கால் இலட்சம் பவுண்டுகளை வழங்கியுள்ளது, பிரிட்டனில் புதிய Centre -கள் வாங்கவும், பள்ளிவாசல் கட்டவும் வேண்டும் என்ற ஆர்வத்தின் காற்று வீசுகிறது. இதிலும் அஹ்மதிப் பெண்களின் கைதான் முக்கிய பங்கு வகிக்கிறது என்று நான் கருதுகிறேன். இதனை பல மீட்டிங்குகளிலும் அவர்கள் தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளனர். சந்திப்புகள் மூலமும் அது வெளிப்படுவதை காண்கிறேன். பள்ளிகள் நிறைய உருவாக வேண்டும். எமது குழந்தைகளின் தர்பிய்யத்திற்கு அவை மிக மிக தேவை என்கின்றனர்.

இதுவே அஹ்மதிய்யத்தின் அழகு. இந்த புரட்சி தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடத்தில் உருவாக்கியது. இந்த ரூஹ் இருக்கும் வரை இபாதத்தில் முன்னேற்றம் பெறக்கூடியவர்கள் பொருள் தியாகம் செய்பவர்கள் உருவாகிக் கொண்டே இருப்பர். அவர்களின் சந்ததிகள் விரைந்து பொருள் தியாகம் செய்பவர்களாவர். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்திற்கு எப்போதும் அத்தகைய தியாகம் செய்யும் பெண்கள், ஆண்கள், வயோதிகர், குழந்தைகளை உருவாக்கிக் கொண்டே செல்வானாக. உலக நட்புகள், உலக வியாபாரங்களை பார்ப்பதற்கு பதிலாக ஆகிரத்தின் மீது பார்வையைச் செலுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தக்வாவின் மீது அடியெடுத்து வைப்பவர்களாக இருக்கின்றனர்.

நான் இப்போது தஹ்ரீகே ஜதீதின் 74-வது நிதியாண்டு முடிந்து 75-வது நிதியாண்டு தொடங்குகிறது. ரிப்போர்ட்டுகள் வந்துள்ளன ஒட்டுமொத்தமாக இவ்வாண்டு இறையருளால் ஜமாஅத்திற்கு தஹ்ரீகே ஜதீதில் 41 இலட்சத்து இரண்டாயிரத்து 491 பவுண்டு தியாகம் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த வசூல் சென்ற வருடத்தை விட 5 இலட்சம் பவுண்டு அதிகமாகும். உலகில் பெரும் பெரும் பொருளாதார சரிவுகள் நிகழ்ந்துள்ள நிலையிலும் நமக்கு இத்தகைய வாய்ப்பு கிடைத்துள்ளது. அஹ்மதிகளின்

தகுதி பொதுவாக எல்லா இடத்திலும் இவ்வாறே உள்ளது. கடைசி மாதம் அல்லது கடைசி நாளில் கூட தனது வாக்குறுதியை நிறைவேற்றி முடித்து விடுகின்றனர்.

பாகிஸ்தான் முழு உலக ஜமாஅத்திலும் முதல் இடத்தில் உள்ளது. வசூல் அடிப்படையில் உலகில் முதல் 10 இடங்களைக் கூறுகிறேன். 1) பாகிஸ்தான் 2) அமெரிக்கா 3) பிரிட்டன். அமெரிக்கா இரண்டாம் இடத்தில் வந்து விட்டது. பிறகு நாம் கணக்கிட்ட போது டாலர் Rate சற்று முன்னேற்றமடைந்தது. ஆனால் மொத்தத்தில் வசூல் சென்ற வருடத்தை விட குறைவு. எனவே அமெரிக்கா அதில் கவனம் செலுத்த வேண்டும். பிரிட்டன் வசூலில் அல்லாஹ்வின் அருளால் 74 ஆயிரம் பவுண்டு அதிகம் வந்துள்ளது. 4) ஜெர்மனி 5) கனடா 6) இந்தோனேஷியா 7) இந்தியா 8) பெல்ஜியம் , ஆஸ்திரேலியா 9) சுவிட்சர்லாந்து 10) நைஜீரியா. சுவிட்சர்லாந்து முதல் பத்தில் இருந்து வெளியேறியது. பிறகு இப்போது வந்து விட்டது. நைஜீரியா ஜமாஅத் தஹ்ரீகே ஜதீதில் மிகவும் கடும் வளர்ச்சி பெற்று முன்னேறி வந்துள்ளது. முதல் பத்து இடத்தில் வந்து விட்டது. இவ்வாறு ஆப்பிரிக்க நாடுகளில் வசூலில் நைஜீரியா முதல் இடத்தில் வந்துள்ளது. நல்ல முன்மாதிரியைக் காட்டியுள்ளது.

கானா, நார்வே, பிரான்ஸ், ஹாலந்து போன்ற சில நாடுகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. நல்ல வளர்ச்சி கண்டுள்ளன. பாகிஸ்தான், பிரிட்டன், இந்தியா, சிங்கப்பூர், சிராலியோன் இவையும் குறிப்பிடத்தக்கவை.

சந்தா வழங்கியவர்களின் எண்ணிக்கை 5 இலட்சம் ஆகியுள்ளது. இது குறைவு தான். ஆப்பிரிக்க நாடுகள் முழுமையாக முயன்றால் என் மனதில் உள்ள இலக்கை எய்தி விடுவர். இந்த எண்ணிக்கை 3 மடங்கு அதிகமாகி விடும். நைஜீரிய எல்லாரினும் அதிகம் தஹ்ரீகே ஜதீத் சந்தா தருபவரின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியுள்ளது. கானா, கனடா, இந்தியா, ஜெர்மனி, பிரிட்டன், பெனின், ஐவரிகோஸ்ட் இவையும் சந்தாதாரர் எண்ணிக்கையைக் கூட்ட முயன்றுள்ளன. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முதன்முதலில் தஹ்ரீகே ஜதீத் திட்டம் தொடங்கிய போது சந்தா தந்தவர்கள் தஃப்தே அவ்வல் (முதல் பதிவேடு) –ல் வருவர். அது மொத்தம் 19 ஆண்டுகளைக் கொண்டது.

பாகிஸ்தான் ரிப்போர்ட்டில் முதல் மூன்று இடம் 1) லாஹூர் 2) ரப்வா 3) கராச்சி. ரப்வாவில் இருப்பவர்கள். பெரும் தியாகம் செய்துள்ளார்கள்.

(தொடர்ந்து ஹுஸுர் அவர்கள் பாகிஸ்தானின் மாநில வாரியான தர வரிசையையும், பிரிட்டனின் மாநில வாரியான தர வரிசையையும், அமெரிக்காவின் மாநில வாரியான தர வரிசையையும் குறிப்பிட்டார்கள்.)

இந்த பொருள் தியாகங்கள் அனைவருக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. அவர்கள் பொருள்களில் உயிர்களில் அல்லாஹ் பரக்கத்தை வழங்குவானாக.

வருங்காலத்திலும் பொருள் தியாகத்தின் ரூஹைப் புரிந்தவாறு பொருள் தியாகம் செய்து கொண்டே செல்வார்களாக. தமது இபாதத்தின் தகுதியையும் உயர்த்துவார்களாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 07.11.2008**

Translated by : **Maullim M. Nizamudeen Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**